# ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 600 006

**ந.க.எண். 3271/இ3/2013, நாள் .12.2020**

பொருள் : ஆசிரியர் தேர்வு வாரியம் – சிறப்பாசிரியர் – உடற்கல்வி ஆசிரியர் நேரடி நியமனம் – 2012–16 – அறிவிக்கை எண். 05/2017ன்படி 28.10.2020 அன்று வெளியிடப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்கான திருத்திய தெரிவுப் பட்டியல் – முன்னாள் இராணுவத்தினா் மற்றும் தமிழ்வழி இடஒதுக்கீடு பணியிடங்களில் நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 1:2 என்ற விகிதத்தில் பணிநாடுநர்களை அழைத்தல் – சார்பு

********

## குறிப்பாணை

ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண். 05/2017ன்படி 23.09.2017 அன்று நடைபெற்ற போட்டித் தேர்வினை தொடர்ந்து 13.08.2018 அன்று நடத்தப்பெற்ற சான்றிதழ் சரிபார்ப்பின் அடிப்படையில் திருத்திய தெரிவு முடிவுகள் 28.10.2020 அன்று வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களில் நிரப்பப்படாமல் உள்ள தங்கள் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள இனசுழற்சி பணியிடத்திற்கு தங்களது விண்ணப்பத்தில் தெரிவித்திருந்த விவரங்களின் அடிப்படையில் நடைமுறையில் உள்ள இனசுழற்சி விதிகளின்படி 1:2 என்ற விகிதத்தில் தாங்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுகிறீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **DINESHKUMAR S** | இனசுழற்சி | **MBC/DNC T EX*** |
| பாடம் | **Physical Education Teacher(PET)** | பதிவு எண் | **17ST14011202** |
| சான்றிதழ் சரிபார்ப்பு நாள் மற்றும் நேரம் | **16-12-2020** | **AN - 02:00pm** | |
| சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் இடம் | **Teachers Recruitment Board,4th floor, Dr.MGR Centenary Building,DPI Campus, College Road,Chennai - 6** | | |

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்டுள்ள பணிநாடுநர் மேற்குறிப்பிட்டுள்ள நாளில் நேரில் தவறாது வருகை புரிய வேண்டும். மேலும் சான்றிதழ் சரிபார்ப்பின் போது கீழ்க்கண்ட ஆவணங்களின் அசல் சான்றிதழ் மற்றும் சுய சான்றொப்பம் இடப்பட்ட இரு நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

1. இடைநிலைக் கல்விச் சான்றிதழ் (SSLC Certificate)
2. மேல்நிலைக் கல்விச் சான்றிதழ் (HSC Certificate)

3. தொழிற் கல்விச் சான்றிதழ் (உடற்கல்வி படிப்பு – பட்டயம் / பட்டச் சான்றிதழ்கள்)
4. மேற்கண்டுள்ள கல்வித் தகுதிகளை வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்தமைக்கான பதிவு அட்டை
5. தமிழ்வழி இடஒதுக்கீட்டின் கீழ் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தேர்வர் பொதுக் கல்வி மற்றும் தொழிற்கல்வியினை தமிழ்வழியில் பயின்றமைக்கான அறிவிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ள படிவத்தில் பெறப்பட்ட சான்றிதழ்
6. முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் பணிநாடுநர்கள் முன்னாள் இராணுவத்தினர் என்பதற்குரிய சான்றிதழை சமர்பிக்க வேண்டும்.
7. இனச்சான்றிதழ் (Community Certificate)
8. நடத்தை சான்றிதழ் (Conduct Certificate)
9. கடவுச் சீட்டு அளவுள்ள புகைப்படம் – 4 (Passport Size Photograph)
10. ஆளறிச்சான்றிதழ் (Identification Certificate) – தரவிறக்கம் செய்து பயன்படுத்தவும்

பணித்தெரிவிற்கான விண்ணப்பத்தில் தாங்கள் தெரிவித்திருந்த விவரங்களின் அடிப்படையில் தாங்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்டுள்ளீர்கள். தாங்கள் தெரிவித்திருந்த விவரங்கள் / சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் ஏதேனும் உண்மைத் தன்மை அற்றது என கண்டறியப்படின் தொடர்புடைய பணிநாடுநர்கள் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுதல் என்பது வேலைவாய்ப்பிற்கு உத்திரவாதமாகாது. அறிவிக்கை 05/2017, நாள் 26.07.2017ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி தெரிவுப்பணி மேற்கொள்ளப்படும். சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வருகை புரிவதற்கென பயணப்படி ஏதும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வழங்கப்படாது. மேலும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வருகை புரியாத பணிநாடுநர்கள் பணித்தெரிவிற்கு கருதப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**தலைவர்**

**பெறுநர்**

பணிநாடுநரின் முகவரி (விண்ணப்பத்தில் உள்ளவாறு)

DINESHKUMAR S
DOOR NO 14
KRISHNAN KOVIL STREET
RASIPURAM PO TK
NAMAKKAL
Tamil Nadu - 637408